நிறுவனத்தின் பெயர் : மின்சக்தி மற்றும் எரிசக்தி

நிறுவனத்தின் பெயர் : இலங்கை நிலக்கரி தனியார் நிறுவனம்

வெளியீட்டு இல. : 175

பாராளுமன்றத்தின் அரப வியாபாரங்கள் தொடர்பிலான குழுவால் சபையிடப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையான கட்டளை இல. 120 (4) இன் கீழ் கௌரவ அமைச்சர் அவர்களின் ஆய்வு மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின்நிலையத்திற்கு 2022-2025 கால வரையறைக்கு உட்பட்ட நிலக்கரி கொன்முதல் செயன்முறை மதிப்பீடு தொடர்பில் விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பாக அரச வியாபார குழுவால் விசாரணைக்குடுபடுத்தப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை மற்றம் விசாரணைக்குட்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை நிலக்கரி தனியார் மின் நிலையத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

செப்டம்பர் 30, 2022 ஆம் திகதி, தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் லக்விஜய நிலக்கரி மின் நிலையத்திற்கு 2022-2025 வரை நிலக்கரி கொள்முதல் செய்வதற்கான கொள்முதல் செயல்முறையின் மதிப்பீடு தொடர்பான சிறப்பு கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் நிலக்கரி கொள்முதல் செயன்முறையை சீரமைக்க 08 பரிந்துரைகள் வழங்கப்பட்டது. அரச வியாபார குழு 09.11.2022 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் பிரகாரம், நவம்பர் 2022 ஆம் திகதிக்கு பின்னர் நடத்தப்படும் அனைத்து கேள்வி மனு கோரல்களுக்கும் மேற்கண்ட பரிந்துரைகளைப் பின்பற்றுமாறு நிலக்கரி நிறுவனத்திற்கு அமைச்சு அறிவுறுத்தியதுடன், மேலும் பரிந்துரைகள் பின்பற்றல் தொடர்பாக நான் திருப்தி அடைகிறேன். கணக்காய்வாளர் நாயகத்தின் 08 பரிந்துரைகள் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் வழங்கிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள உண்மைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மேலும், நுரைச்சோலை லக் விஜய நிலக்கரி மின்நிலையத்திற்கான 2022-2025 காலப்பகுதிக்கான நிலக்கரி கொள்வனவு செயன்முறையின் மதிப்பீடு தொடர்பான விசேட அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க குழுவின் பரிந்துரையின் பிரகாரம் இலங்கை நிலக்கரி தனியார் நிறுவனம் சமர்ப்பித்த அறிக்கையை பரிந்துரைக்கிறேன்.

ஒப்பம்
கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன
செயலாளர்
மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு

2024.01.23
திகதி

அரச வர்த்தகம் தொடர்பான சபையின் இரண்டாம் அறிக்கை - இலங்கை நிலக்கரி தனியார் நிறுவனம்

இலங்கை நிலக்கரி தனியார் நிறுவனம் நிலக்கரி கொள்முதல் செய்வதில் பின்வரும் நடைமுறையை பின்பற்றுகிறது. நீண்ட கால கேள்வி மனுக்கள் மற்றும் உடனடி கொள்முதல் மூலம் பதிவு செய்யப்பட்ட நிலக்கரி விநியோகத்தர்களிடமிருந்து நிலக்கரி கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு பருவத்திற்கான நிலக்கரி தேவை இரண்டு பருவங்களில் நீண்ட கால கேள்வி மனு மூலமும் மற்றும் ஒரு பருவத்திற்கு நிலக்கரி தேவையின் மீதி (நீண்ட கால கேள்வி மனுவில் பெறப்பட்ட தொகையை தவிர்த்து) உடனடி கொள்முதல் மூலம் கொள்முதல் செய்யப்படும். உதாரணமாக, ஒரு பருவத்தில் நிலக்கரி தேவை 2,250,000 மெட்ரிக் டொன் என்பதால், ஒரு பருவத்தில் 1,125,000 மெட்ரிக் டொன்கள் நீண்ட கால கேள்வி மனு கொள்முதல் மூலமாகவும், மீதமுள்ளவை உடனடி கொள்முதல் மூலமாகவும் கொள்முதல் செய்யப்படும்.

விநியோகத்தர்களை பதிவு செய்தல்.

நிலக்கரி கொள்முதல் செய்வதற்கான தகைமை வாய்ந்த விநியோகத்தர்களின் பதிவு செய்தல் நடவடிக்கையானது கொள்முதல் வழிகாட்டுதல்களின் பிரகாரம் முதலில் மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு, ஒரு விநியோகத்தரின் செல்லுபடியாகும் பதிவுக் காலம் 03 ஆண்டுகள் ஆவதுடன், பின்னர் அந்த காலத்திற்கு அப்பால் விநியோகத்தர் விநியோத்தை மேற்கொள்ள நினைத்தால், அவர் மீண்டும் பதிவு செய்ய வேண்டும்.

நிலக்கரி விநியோகத்தராக பதிவு செய்வதற்கு பின்வரும் நிர்ணயங்கள் கருதப்படுகின்றன. இந்த விண்ணப்ப நிறுவனங்கள் தொடர்பாக, அந்தந்த நாட்டில் உள்ள இலங்கை தூதரகம், அந்த நிறுவனம் அந்தந்த அரசின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமா என்பதை உறுதி செய்யும். USD 5,000 தொகையை திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத்தொகையைப் பெற்ற பிறகு, மூன்று வருட காலத்திற்கு ஒரு விநியோத்தர் பதிவு செய்யப்படுகிறார். தற்போது நிலக்கரி நிறுவனத்தில் 17 விநியோகத்தர்கள் இவ்வாறு பதிவு செய்துள்ளனர். மேலும் 16 நிறுவனங்கள் பதிவுக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளன. புதிய விநியோகத்தர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு வாரமும் திங்கட் கிழமை பணி நாட்களில் (அரசு விடுமுறை நாட்களில் அல்ல) ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் மற்றும் உடனடி கொள்முதலுக்காக நியமிக்கப்பட்ட மனுத் தொடக்கக் குழு விண்ணப்பங்களைத் திறந்து சிறப்பு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் தகுதிகளைச் சரிபார்த்து, அவை தொடர்புடைய அளவுகோல்களுடன் பொருந்தினால் மட்டுமே அ.டொ. 5000 வைப்பிற்காக பெறப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

நீண்ட கால கொள்முதல்

ஒரு முறை நிலக்கரி தேவையில் மெ.வோ. 2,250,000 (குறைவாக அல்லது 10% அதிகமாக) நிலக்கரியின் அளவு இரண்டு பருவங்களில் கொள்முதல் செய்தல் தொடர்பாக கேள்வி மனு செயன்முறை (தேசிய வரையறுக்கப்பட்ட மனு கோரல்) மூலம் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து கேள்வி மனுக்களை அழைத்த பிறகு தகைமை வாய்ந்த விநியோகத்தர் தெரிவு செய்யப்படுவார். இங்கே, பதிவுசெய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து போட்டி மனுக்கள் கோரப்படுவதுடன் அந்த மனுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்பப்படுகின்றன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழுவுக்கு அனுப்பப்படும். மதிப்பிடப்பட்ட குறைந்தபட்சம் பதிலளிக்கக்கூடிய மனுதாரர் குறித்து ஏனைய மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படுமவதுடன் மற்றும் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், ஒரு வார கால அவகாசத்திற்னுள் அறியத் தருமாறு குறித்த நிலை அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்படும். பின்னர் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு ஒப்பந்தம் வழங்கப்படும்.

உடனடி கொள்முதல்

22.07.2015 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், உடனடி கொள்முதல் ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படும். இங்கு, ஒரு பருவ கால தேவையில் நீண்ட கால கேள்வி மனுக்கள் மூலம் பெறப்பட்ட தொகையை தவிர்த்து, மீதமுள்ள தொகை உடனடி கொள்முதல் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு உடனடி கொள்முதல் அண்ணளவாக 300,000 மெட்ரிக் டொன் (10% அதிகமாகவோ அல்லது குறைவாகவோ) அளவினை (சுமார் 05 கப்பல் இருப்புகள்) பெறப்படும். இங்கே, பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. அங்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள், நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்குப் பரிந்துரைத்த பிறகு மதிப்பீடு செய்யப்படும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பிடப்படும் மனுக்கள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்பு நிலை கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்படுல் வேண்டும் அமைச்சர்கள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்பு நிலை கொள்முதல் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு, அமைச்சரவையின் ஒப்புதலுக்கு உட்பட்டு ஒப்பந்தமானது வழங்கப்படும். அதனை தொடர்ந்து அடுத்த வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்பந்த வழங்கல் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்

ஓப்பம்

தலைவர்

இலங்கை நிலக்கரி தனியார் நிறுவனம்

நுரைசோலை லக்விஜய நிலக்கரி மின்நிலையத்திற்கு 2022-2025 கால வரையறைக்கு உட்பட்ட நிலக்கரி கொன்முதல் செயன்முறை மதிப்பீடு தொடர்பில் விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பாக அரச வியாபார குழுவால் விசாரணைக்குடுபடுத்தப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை மற்றம் விசாரணைக்குட்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை நிலக்கரி தனியார் மின் நிலையத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

	அரச வியாபார குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்	இலங்கை நிலக்கரி தனியார் மின் நிலையத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
01	நிலக்கரி பெறுகை நடைமுறை தொடர்பில் அனைத்து தரப்பினரும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறைக்கு இணங்க தனது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றியுள்ளதாக உறுதிப்படுத்தல் மற்றும் அந்த நிலைமையிலிருந்து விலகும் தரப்பினருக்கு எதிராக பொருத்தமான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்குரிய தேவைப்பாடு வலியுறுத்தப்படுகின்றது.	பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆர்வமுள்ள தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எழும் விசேட சூழ்நிலை காரணமாக அதிலிருந்து விலகிச் செல்ல வேண்டியிருந்தால் மாத்திரமே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும்.
02	வழிக்காட்டிக் கோவை 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் மற்றும் வழங்குனர்களின் நிதி இயலுமை, அனுபவம், வழங்கலின் தரம், போதிய சட்ட கடப்பாடுகள் உள்ளடங்கலாக அடிப்படைத் தேவைப்பாடுகளை பாதுகாக்கும் வகையில் விலைக்கேள்வியாளர்கரள பதிவு செய்யும் நடைமுறை ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய மட்டத்தில் தளர்வாக்கப்பட்டு போட்டி தன்மையை அதிகரித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.	இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொள்முதல் வழிகாட்டுதல்கள் விதி 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மற்றும் விநியோகத்தர்களின் அடிப்படை நலன்களைப் பாதுகாக்கும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 03 வருட அனுபவத்துடனான தொடர்புடைய நிலக்கரி விநியோத்தரை பங்கேற்பதற்கு அனுமதிப்பதன் மூலம் போட்டித்தன்மையை அதிகரித்ததுள்ளதுடன் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு பதிவு செயல்முறையை எளிதாக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு மாத்திரமன்றி ஏனைய நாடுகளுக்கும் நிலக்கரி விநியோகம் செய்த அனுபவம் இருந்தால் அந்தச் சூழல்களும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

03	விலைக்கேள்வி ஆவணங்களுக்கு திருத்தங்களை மேற்கொள்ளும் போது குறித்த சான்றுபடுத்தல்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் அவ்வாறான திருத்தங்களின் சட்ட ரீதியான தன்மையை சான்றுபடுத்திய பின்னர் அவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் அந்த திருத்துங்களுக்கு பொருந்தும் வகையில் விலைக் கேள்வி ஆவணங்களில் ஏனைய பிரிவுகள் மற்றும் உடன்படிக்கை திருத்துங்கள் மேற்கொள்ள பொறுப்புடன் செயற்பட வேண்டும். விலைக்கேள்வி ஆவணங்களுக்கு விலைக்கேள்வி கோரப்பட்டதன் பின்னர் முக்கியமான திருத்தங்களில் அந்த திருத்துங்களை திருத்தங்களை பின்பற்றுவதற்கு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் நியாயமான காலமொன்று வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் அனைத்து மனுதாரர்களுக்கும் நியாயமான கால அவகாசம் வழங்கவும், கொள்முதல் வழிகாட்டுதல்களின் 5.3.15 இன் விதிகளின்படி கொள்முதல் செய்வதில் இத்தகைய திருத்தங்களைத் தவிர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கேள்வி மனு ஆவணங்களில் அத்தகைய திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால், அத்தகைய திருத்தங்களுக்கு இணங்க அனைத்து விநியோகத்தர்களுக்கும் நியாயமான கால அவகாசம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
04	நிலக்கரி பெறுகையில் வழிக்காட்டி கோவையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைகள் திட்டம் முழுமையாகவும் முறையானதாகவும் அங்கீகரிக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் உரிய காலத்தில் நிலக்கரி விநியோகத்தினை உறுதிப்படுத்தும் வகையில் நிதி ஏற்பாடு தொடர்பில் முன் இணக்கப்பாட்டொன்றினை பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.	2022 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் திட்டம் 29.12.2022 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டதுடன் மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் திட்டத்திற்காக 07.12.2023 ஆம் திகதி இயக்குநர்கள் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
05	அவ்வாறு வழங்கனருக்கு அதிக எண்ணிக்கையில் கூட்டுத்தொகையை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் எனில் அந்த கூட்டுதொகைக்கு சட்ட ஆறுனை உள்ளமை தொடர்பில் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அதற்கு காணப்பட வேண்டிய இயலுமைகள் மற்றும் சட்ட தொடர்புகள் சிறந்த முறையில் உறுதிப்படுத்தும் வகையில் விலைக்கேள்வி ஆவணங்கள் மற்றும் உடன்படிக்கைகளை வலுப்படுத்தி தரமான நிலக்கரி இருப்பினை உரிய காலத்தில் பெற்றுக்கொன்வதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.	இந்த விடயத்தில் கவனம் செலுத்திய பிறகு, திறந்த சர்வதேச கேள்வி மனுச் செயல்முறையைத் தொடங்கும் போது, நிலக்கரி நிறுவனத்தால் தற்போது விநியோகத்தரை பதிவு செய்யும் போது மனுதாரர்களை மதிப்பிடுவதற்கான அளவுகோலாக தற்போது கேள்வி மனு ஆவணங்களில் குறைந்தபட்ச அடிப்படைத் தகுதிகளைச் சேர்த்துள்ளது. இந்த நிலைமை பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து கேள்வி மனு கோருவதை பாதிக்காது. இது வயிலும் திறந்த கேள்வி மனு கோரல் தகைமையாக (Eligibility criteria) திறந்த சர்வதேச ஏல ஆவணத்தில் தகுதி அளவுகோலின் பிரிவு 2.8 சேர்க்கப்பட்டுள்ளது.

06	நிலக்கரி பெறுகைக்குரிய ஒருங்கிணைந்த குறிக்காட்டியினை தீர்மானிக்கும் போது உச்ச பொருளாதார நலன் அரசாங்கத்திற்கு கிட்டும் வகையில் அந்த குறிக்காட்டியை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் வலயக் குறிக்காட்டி தொடர்பில் கால அடிப்படையில் மீள கவனத்தில் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிச்சயமற்ற நிலையில் நாட்டுக்கு மிகவும் சாதகமான குறிகாட்டிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திடம் இருந்து மேலதிக அவதானிப்புகளைப் பெறுவதற்கு நிலக்கரி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், கொழும்பு பல்கலைக்கழகமும் இது தொடர்பாக அவதானிப்புகள் கோரியுள்ளதுடன் அனைத்து பிராந்திய குறிகாட்டிகளையும் உரிய காலத்தில் மீளாய்வு செய்து மிகவும் சாதகமான குறிகாட்டிகளின் அடிப்படையில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
07	2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தில் திறந்த சர்வதேச கேள்வி நடைமுறையை பின்பற்றி மற்றும் தற்போது பதிவு செற்துள்ள வழங்குனர்களுக்கும் பெறுகையில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் பெறுகை நடைமுறையை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. திறந்த சர்வதேச கேள்வி நடைமுறையை ஆரம்பிக்கும் போது நிலக்கரி கம்பனியினால் தற்போது பதிவு செய்யும் போது நிதி மற்றும் தொழினுட்ப இயலுமையை மதிப்பீட்டிற்கு உள்ளாக்கும் ஆகக்குறைந்த அடிப்படை தகைமைகள் விலைக்கேள்வி ஆவணங்களின் விலைக்கேள்வியாளர்களை மதிப்பீடு செய்யும் அளவீடுகளாக உள்ளடக்கப்படவேண்டும் என்பது பரிந்துரைக்கப்படுகின்றது.	இது தொடர்பில் விடய இல. 05 இல் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
08	அந்த பெறுகைகளுக்குரியதாக மிகவும் உயர்ந்த அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள இயல்பான வகையில் அவசியமான கற்கைகளை மேற்கொள்வதற்கும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் போதிய காலம் அமைச்சரவைக்கு கிடைக்கும் வகையில் சரியான தகவல்களை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு எரிய உத்தியோகத்தர்களுக்கு கட்டளையிடல்.	அதன்பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓப்பம்

தலைவர்

இலங்கை நிலக்கரி தனியார் நிறுவனம்